

ஒரு சின்னப் பையன் மல்லிகை செடியைப் பார்த்து ஓடி வந்தான். அவனுடன் அவன் தந்தையும் வந்தார். “ஏலேய்... வேகமா வந்து இந்த மல்லிகைப் பூவை எல்லாம் பறிச்சு கூடைக்குள்ள போடு... சந்தைக்குப் போகணும் என்றார். மல்லிகைச் செடி வேர் வரைக்கும் நடுநடுங்கிப் போனது. அந்தப் பையன் பூவைப் பறிக்கப் பறிக்க மல்லிகைச் செடிக்கு வலி தாங்க முடியவில்லை. அய்யோ அம்மா என்று கதறியது. தாமரை அதைப் பார்த்தது. மல்லிகையைக் காப்பாற்ற வேண்டுமென்று தாமரைக்குத் தோன்றியது. ஆனால் ஒன்றும் செய்ய முடியாதே என்று நினைத்துக் கொண்டு யோசித்தது.



அப்போது அந்தப் பையனின் கண்கள் தன்னை நோக்கித் திரும்புவதைப் பார்த்த தாமரை நடுங்கிப் போனது. அய்யோ இவன் நம்ம பக்கமில்ல திரும்புறான். மல்லிகையைப் பறிச்சாலாவது பூ, இலை, கிளையோட போயிரும். நம்மளப் பிடுங்கினா வேரோட பிடுங்கி ஒண்ணுமில்லாமப் பண்ணிருவானே என்று மிகவும் பயந்தது.

ஆனால் தீமையிலும் ஒரு நன்மை நடந்தது. சேற்றுப் பக்கமாகப் போன மகனைத் தந்தை தடுத்து நிறுத்தி விட்டான். ஏலே... சேத்துப் பக்கமாப் போறியே. சட்டை மேலெல்லாம் சேறாயிறாது ஒழுங்கா இரு என்று திட்டினார். பையனும் அமைதியாக நின்று விட்டான். தாமரையும் நிம்மதிப் பெருமூச்சு விட்டது.



இன்னொரு பக்கம் குயில் இருந்த மாமரத்துக்கு அருகில் ஒருவன் ஒளிந்து கொண்டிருந்தான். குயிலும் பயந்து தன்னுடைய பாட்டை நிறுத்தி விட்டு இவன் எதற்காக ஒளிந்து கொண்டிருக்கிறான் என்று அவனைக் கவனித்தது. அந்தப் பக்கம் மயில் வந்தது. அவன் தன் கையில் இருந்த ஏதோ ஒரு பொருளை எடுத்து வீசினான். குயில் என்னவென்று பார்த்தது. ஒரு சின்ன ஊசி மயிலுடைய உடம்பில் போய்த் தைத்தது. மயில் மயக்கமாகி விழுந்து விட்டது. பின்பு அவன் பயமில்லாமல் மயிலின் அருகில் போய்த் தோகையில் இருந்து இறகுகளை ஒடிக்க ஆரம்பித்தான்.

# போட்டி



ஒரு வகுப்பறை. வகுப்பறையில் ஆசிரியர் மாணவர்களிடையே ஒரு போட்டி நடத்த விரும்பினார். ஆசிரியர் மாணவர்களை இரண்டு குழுக்களாகப் (அணிகளாக) பிரித்தார். இரு குழுக்களைத் தனித்தனியாக ஓர் அறையில் இருக்கச் செய்தார். மாணவர்கள் தத்தம் அணியினரே வெற்றி பெற வேண்டும் என ஆர்வத்துடன் இருந்தனர்.

இரு அறைகளிலும் இரு குழுக்களின் முன்னர் பலவிதமான பழங்கள், உணவுகள் வைக்கப்பட்டன. மாணவர்களின் கண்களில் ஆர்வம் ததும்பியது. ஆசிரியர் மாணவர்களிடம் இப்பொழுது சாப்பிடும் போட்டி நடைபெற உள்ளது என்றார். மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சியில் உற்சாகக் குரல் எழுப்பினர்.

ஒவ்வொருவரும் “இன்றைக்குச் சரியான வேட்டை. எல்லாவற்றையும் ஒரு பிடி பிடிக்கணும்” எனத் தமக்குள் பேசிக் கொண்டனர். அந்நேரத்தில் ஆசிரியர் போட்டிக்கான விதிமுறைகளைக் கூறத் தொடங்கினார். “இந்த உணவுகளை எல்லாம் எந்த அணியினர் முதலில் சாப்பிட்டு முடிக்கிறார்களோ அந்த அணியினரே வெற்றி பெற்றவர்கள்” என்றார். “மாணவர்கள் அனைவரும் இப்பொழுதே போட்டியைத் தொடங்குங்கள்” என்று மகிழ்ச்சியில் துள்ளினர்.

ஆனால், ஆசிரியரோ போட்டியில் ஒரு நிபந்தனை என்றார். மாணவர்கள் அனைவரும் அமைதியாயினர். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். ஆசிரியர், “இந்த உணவைக் கையால் எடுத்துச் சாப்பிட வேண்டும். அப்படிச் சாப்பிடும் பொழுது கை மடங்காமல் நேராக இருக்க வேண்டும்" என்றார்.

“ஆஹா! ஒரே இடத்தில் இத்தனை உணவு வகைகளா? நம் ஆயுள் முடியும் வரை இங்கேயே தங்கி விடலாம் போல இருக்கிறதே. இங்கேயே சாப்பிட்டுத் தூங்கி சுகமாக வாழலாமே... இந்த முட்டாள் எலிகள் எதுவும் ஏன் இங்கு வருவதேயில்லை. சரி. சிண்டுவையும் கூப்பிட்டு இந்த இடத்தைக் காட்டலாமா? என்று யோசித்தது. மறு நொடியே சிண்டுவிடம் எதற்குச் சொல்ல வேண்டும். நாம் மட்டுமே சந்தோசமாக இருக்கலாம் என முடிவு செய்தது.



அப்புறம் தானியங்களை ஒரு கை பார்க்கலாம் என்று தாழிக்குள் நுழைய முயற்சித்தது. ஆனால், அந்தத் தாழிகள் மிகவும் உயரமாக இருந்தன. ஒரு மனிதனின் உயரத்திற்கு நீண்டிருந்தன. உள்ளே நுழைய வழியே இல்லை. எவ்வளவு உயரம் குதித்தாலும் தாழியின் வாயை எட்டவே முடியாது. ‘ஓ அது தான் எந்த எலிகளும் இங்கு வருவதில்லையா? என்ன செய்வது, ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும்’ என்று சுண்டு யோசித்தது.

அப்போது சுண்டுவின் கண்களில் ஒரு தாழியின் அடியிலிருந்த சின்ன ஓட்டை புலப்பட்டது. ‘ஆகா வழி கிடைத்து விட்டது’ என்று ஓட்டைக்குள் நுழைந்து நெல்லை குஷியாகத் தின்னத் தொடங்கி விட்டது.

இன்னொரு பக்கம் சிண்டு பண்ணையின் அடுக்களைப் பக்கமாகச் சென்றது. சாப்பிட ஏதாவது கிடைக்குமா என்று நோட்டம் விடத் தொடங்கியது. அங்கு ஒரு பாத்திரத்தில் நிறைய இனிப்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்ததும் சிண்டு உடனே அதைத் தின்னப் பாய்ந்தது.



“ இத்தனைப் பலகாரங்கள் இங்கிருக்க இந்த எலிகள் சிந்திச் சிதறியதை உண்டே வாழ்வது ஏன்? மனிதர்கள் மிச்சம் வைத்ததைச் சாப்பிடுவதில் என்ன பெருமை இருக்கிறது. இப்படிப் புதிதான பண்டங்களை உண்டால் எத்தனை சுவையாக இருக்கும்’ என்று ஆசை தலைக்கேற பண்டங்களை ஒவ்வொன்றாக எடுத்து உண்ணத் தொடங்கியது.